விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 175 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 29 வியாழக்கிழமை (12.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வடக்கு மனித புதைகுழிகள்

### ராஜபக்ஷ அரசு போல் அநுர அரசும் கிடப்பில் போடக்கூடாது - ஐக்கிய மக்கள் சக்தி



(கொழும்பு)

"வடக்கில் தொடர்ந்து தோண்டப்படும் மனிதப் புதை குழிகள் தொடர்பில் அநுர அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும். கடந்த ராஜபக்ஷ அரசு போல் இந்த விவகாரத்தை அநுர அரசும் கிடப்பில் போடக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க

## மின்சாரக் கட்டணம் 15 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத்தை 15 வீதத்தால் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த மின் கட்டணத் திருத்தம் இன்று நள்ளிரவு (12) முதல் நடைமுறைக்கு வரும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே பொதுப் பயன்பாடுகள்


15ஆம் பக்கம் பார்க்க

### நல்லூர் பிரதேச சபை

# முதல் 2 வருடம் மான்

# அடுத்த 2 வருடம் வீடு

### விக்னேஸ்வரன் - சுமந்திரன் உடன்படிக்கை



(கொழும்பு)

நல்லூர் பிரதேச சபையில் ஆட்சியமைப்பது தொடர்பாக தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

### 16ஆம் திகதிவரை

## வடக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை வரை வடக்கு

15ஆம் பக்கம் பார்க்க

### விபரீத முடிவெடுத்த

## யாழ். பல்கலை மாணவி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

விபரீத முடிவெடுத்த யாழ்.

02ஆம் பக்கம் பார்க்க

### குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில்

## முன்னாள் ஜனாதிபதி ரணில் ஒரு மணி நேரம் வாக்குமூலம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி சுமார் ஒரு மணி நேரம் வாக்குமூலம் வழங்கினார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தாக்கல் செய்த

15ஆம் பக்கம் பார்க்க

## விக்னேஸ்வரன் - சுமந்திரன் உடன்படிக்கை தொடர்பில்

### சமூகவலைத்தளங்களில் விமர்சனம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையில் ஆட்சியமைப்பது தொடர்பாக விக்னேஸ்வரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையே நேற்று கொழும்

15ஆம் பக்கம் பார்க்க




## தண்டனைச் சட்டக் கோவையை திருத்தம் செய்வதற்கு

### அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

தண்டனைச் சட்டக் கோவையின் (உடலியல் தண்டனை) திருத்தம் செய்வதற்கான சட்டமூலமொன்றை நிறைவேற்றுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுப் புதன்கிழமை (11) நடைபெற்ற போதே அமைச்சரவைப் பேச்சாளர்

15ஆம் பக்கம் பார்க்க

## பூநகரி பிரதேச சபையின்

### கன்னியமர்வு நேற்று ஆரம்பம்

(பூநகரி)

கிளிநொச்சி பூநகரி பிரதேச

15ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி அநுரவுக்கு ஜேர்மனியில் அமோக வரவேற்பு



(கொழும்பு)


ஜேர்மனியக் கூட்டாட்சி குடியரசிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு, ஜேர்மனி ஜனாதிபதி பிராங்க்-வால்டர் ஸ்டெய்ன்மியரினால் நேற்று அமோக

15ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மன் வெளியுறவு அமைச்சரை சந்தித்த ஜனாதிபதி அநுர குமார



ஜேர்மன் கூட்டாட்சி குடியரசிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நேற்று (11) பிற்பகல் பெர்லினின் வொல்டொப் எஸ்டோரியா ஹோட்டலில் ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் ஜொஹான் வடபுலை சந்தித்துக் கலந்துரையாடினார்.

அரசாங்க முன்னுரிமைகளின் அடிப்படையில் வர்த்தகம், டிஜிட்டல் பொருளாதாரம், முதலீடு மற்றும் தொழில் பயிற்சி வாய்ப்புகள் உட்பட இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான புதிய வழிகள் குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஜேர்மனிக்கான இலங்கைத் தூதுவர் வருணி முதுகுமாரன, இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜூன ஹேரத், வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் வர்த்தக அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா) சுகீஷ்வர குணரத்ன மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.(ம-4,7)

## யாழ். பல்...

பல்கலைக்கழக மாணவி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யான்சிகா என்ற மாணவியே விபரீத முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

இவர் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7,4)

# புத்தூரில் விபரீத முடிவெடுத்த குடும்பப்பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

புத்தூரில் விபரீத முடிவெடுத்த குடும்பப் பெண் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

இதில் புத்தூர் மேற்கைச் சேர்ந்த ஒரு பெண் பிள்ளையின் தாயான உதயகுமார் சுலோஷனா(வயது50) என்பவரே மரணமடைந்தவராவார்.

கடந்த 7 ஆம் திகதி சுருக்கிட்டுத் தொங்கிய நிலையில், உறவினர்களால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று(11) காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அயலவருடன் ஏற்பட்ட சண்டை காரணமாக மன அழுத்தத்துக்குள்ளாகிய நிலையில் இவ்வாறு விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-4,7)



வியட்நாமில் நாளை மறுதினம்(14) ஆரம்பமாகவுள்ள சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் நால்வர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் ஒலிம்பியாட் போட்டிக்கு பிரிவு 3 இல் போட்டியிட்ட 500 மாணவர்களில் இவ் நான்கு யாழ். இந்து மாணவர்களும் முன்னிலை பெற்று தேர்வாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

## இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று சற்று அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று (11) வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 294 ரூபாய் 97 சதம், விற்பனைப் பெறுமதி 303 ரூபாய் 29 சதம் ஆகும். (ம-4,7)

## முதல் 2...

இந்த உடன்படிக்கை நேற்று மாலை கொழும்பில் உள்ள விக்னேஸ்வரனின் இல்லத்தில் கையெழுத்திடப்பட்டது.

உடன்படிக்கையின்படி நல்லூர் பிரதேச சபையில் முதல் இரண்டு வருடங்கள் தவிசாளர் பதவி தமிழ் மக்கள் கூட்டணிக்கும், அடுத்த இரண்டு வருடங்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் வழங்கப்படுகின்றது.

இந்த உடன்படிக்கை நல்லூர் பிரதேச சபைக்காக மட்டுமே எனத் தெரிவிக்கப்பட்டாலும், காரைநகர் உட்பட பிற இடங்களில் தமிழ் மக்கள் கூட்டணி ஆட்சி அமைக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரவளிக்கும் என்று சுமந்திரனால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் குறித்த சந்திப்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினர் தவச்செல்வம் சிற்பரனும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7,33)


மணிவிழா வாழ்த்து



திருமதி.
விஜயலக்ஷ்மி கௌரிதாசன்
(சிரேஷ்ட ஆசிரியை)

சேவைக் காலம் :
22.03.1990 - 05.04.2025

- யா/எழுதுமட்டுவாழ் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை 22.03.1990 – 31.12.1995
- யா/கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 01.01.1996 – 19.04.1996
- மு/கரிப்பட்டமுறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 19.04.1997 – 14.02.1998
- மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி (இணைப்பு)
- மு/கொக்கிளாய் அரச தமிழ்க் கலவன் பாடசாலை 15.02.2000
- மு/மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம் 16.02.2000 – 31.12.2005
- யா/அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 01.01.2006 – 18.05.2006
- கிளி/பாரதி வித்தியாலயம் 19.05.2006 – 14.12.2010
- கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி 15.12.2010 – 03.04.2025

Best Wishes!

எமது பாடசாலையில் அரும்பணியாற்றி 06.04.2025 அன்று ஓய்வுபெற்ற ஆசிரியர் அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் நோய் நொடியின்றி ஆரோக்கியமாக வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர் : ஊழியர் நலன்புரிச் சங்கம்
கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி சமூகம்

மணிவிழா வாழ்த்து



திருமதி.
தியாகேஸ்வரி கணேஸ்வரநாதன்
(பிரதி அதிபர்)

சேவைக் காலம் :
14.12.1981 - 13.04.2025

- கிளி/கரியாலை நாகபடுவான் இல– 1 அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை 14.12.1987 – 24.01.1988
- கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம் 25.01.1988 – 31.12.1989
- ஆசிரியர் கல்லூரி 01.01.1990 – 31.12.1991
- கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம் 01.01.1992 – 30.06.1993
- கிளி/பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம் 01.01.1993 – 01.01.2006
- கிளி/செந்திரேசா மகளிர் கல்லூரி 02.01.2006 – 15.01.2007
- கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி 16.01.2007 – 25.01.2012 ஆசிரியர் 26.01.2012 – 29.01.2013 அதிபர் 30.01.2013 – 13.04.2025 பிரதி அதிபர்

Best Wishes!

எமது பாடசாலையில் அரும்பணியாற்றி 13.04.2025 அன்று ஓய்வுபெற்ற அதிபர் அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் நோய் நொடியின்றி ஆரோக்கியமாக வாழ வாழ்த்துகிறோம்.

(C-3189)

வாழ்த்துவோர் : ஊழியர் நலன்புரிச் சங்கம்
கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி சமூகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செம்மணி புதைகுழி விவகாரம்

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் தமிழர்களுக்கு விடிவு கிட்டுமா?

## அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வி

**(யாழ்ப்பாணம்) ...................... பட்டலந்த அறிக்கையை அரசியலுக்காக தூசி தட்டி வெளியில் எடுத்தவர்கள் தமிழர்களுக்கு எதிராக புரியப்பட்ட இன அழிப்பு, இனப்படு கொலை விடயங்களை பகிரங்கமாக கையாள்வதற்கு முன் வருவார்களா?என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.**

நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

செம்மணி சமூக புதைகுழியில் தோண்டத் தோண்ட கொலை செய்து புதைக்கப்பட்ட அல்லது உயிரோடு புதைத்து கொல்லப்பட்டோரின் உடல் எச்சங்கள் தனித்தனியாகவும், கூட்டாகவும் தோன்றுகின்றன. இதற்கான நீதி விசாரணை நடத்தப்படும் என நீதி அமைச்சர் குறிப்பிட்டாலும் அகழ்வு பணிகளும் ஆய்வுகளும் சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப அத்துறையில் சர்வதேச நிபுணத்துவம் கொண்டவர்களால் நடத்தப்பட்டால் மட்டுமே நிகழ்த்தப்பட்டுள்ள இனப்படுகொலைளுக்கு முகம் கொடுத்து வலிகளை சுமந்து அரசியல் நீதிக்கு ஏங்கிக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கு நீதி கிட்டும். தேசிய மக்கள் சக்தி இதற்கான கதவுகளை திறக்குமா? அல்லது நாட்டின் இறைமை எனக் கூறி நீதிக்கான தடைகளை விதிக்குமா? என்பதே எமது கேள்வி.

தற்போது அகழப்படும் செம்மணி சமூக புதைக்குழி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க ஆட்சி காலத்துக்குரியவை.

தற்போது அகழப்படும் சமூக புதைகுழியை விட மேலும் பல சமூக புதைகுழிகள் தமிழர் தாயகத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றிற்கு எல்லாம் விசாரணையை நடத்த எந்த ஒரு ஆட்சியாளர்களும் துணியவில்லை. அகழ்வு மற்றும் ஆராய்வு அறிக்கைகளை எல்லாம் பாதாள கிடங்கில் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

வன்புணர்வின் பின்னர் கொடூரமாக கொலை செய்யப்பட்ட கிருஷாந்தி தொடர்பில் மரண தண்டனை கைதியான கோப்ரல் சோமரத்னா என்பவரால் 600ற்கு மேற்பட்டோர் செம்மணியில் கொன்று புதைக்கப்பட்டார் எனக் கூறியதன் பின்னர் அதனோடு தொடர்புடையவர்களாக அடையாளம் காணப்பட்டோர் விடுவிக்கப்பட்டது மட்டுமல்ல பதவி உயர்வுகளும் அரச சலுகைகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் சமூக புதைகுழியை ஆட்சியாளர் ஏற்றுக் கொண்டு அக்காலப்பகுதியில் இப்பிரதேசத்தின் பாதுகாப்புக்கு பொறுப்பாய் இருந்தவர்களுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுகளையும் அரச சலுகைகளையும் அரசு மீளப்பெறல் வேண்டும்.

மனித குலத்துக்கு எதிரான திட்டமிட்ட இன படுகொலை 2009 இறுதி யுத்தத்திற்கு முன்னரும் இலங்கை பேரினவாத ஆட்சியாளர்களால் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தியுடமைக்கு மிக ஆணித்தரமான சாட்சியாகவே செம்மணி சமூக புதைகுழி காட்சி தருகின்றது. இது மனித நேயம் கொண்ட மனசாட்சி உள்ளோரை நிச்சயமாக தட்டி எழுப்போம்.

இலங்கையின் பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழர் தாயகத்தில் தமிழர்களை கொன்று குவித்ததும், காணாமலாக்கப்பட்டு சமூக புதைகளுக்குள் தள்ளியதும், ஆயிரக்கணக்கானோரை சித்திரவதை செய்து சிறைகளில் அடைத்ததும் இலட்சக்கணக்கானோரை புலம்பெயர வைத்ததும் தமிழர்கள் என்பதற்காக மட்டுமல்ல தமிழரின் தாயகத்தையும் தேசியத்தையும் அதன் அரசியல் வழிதடத்தையும் அழிப்பதற்காகவே.

பட்டலந்த அறிக்கையை அரசியலுக்காக தூசி தட்டி வெளியில் எடுத்தவர்கள் தமிழர்களுக்கு எதிராக புரியப்பட்ட இன அழிப்பு, இனப் படுகொலை விடயங்களை பகிரங்கமாக கையாள்வதற்கு முன்வரமாட்டார்கள். அதுவும் அரசியலே என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8-299)

# இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்த தமிழ் முற்போக்கு கூட்டணியினர்

(கொழும்பு)

இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பழனி திகாம்பரம் மற்றும் வே. இராதாகிருஷ்ணன் ஆகியோரே இந்திய உயர் ஸ்தானிகரை சந்தித்திருந்தனர்.

இலங்கையின் அரசியல் நிலவரம் தொடர்பாகவும் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்களின் நலன்புரிக்கான அபிவிருத்தி திட்டங்கள் உட்பட இலங்கையில் இந்தியா முன்னெடுக்கும் பல்வேறு இருதரப்பு முன்னெடுப்புகள் குறித்தும் இதன்போது கலந்துரையாட [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

# 2026 உலக கோப்பை கால்பந்து

## பிரேசில், ஈக்வடார், அவுஸ்திரேலியா அணிகள் தகுதி

உலகக் கோப்பை கால்பந்து போட்டி அடுத்த ஆண்டு (2026) ஜூன் 11 ஆம் திகதி முதல் ஜூலை 19ஆம் திகதி வரை கனடா, மெக்சிகோ, அமெரிக்கா ஆகிய 3 நாடுகளில் நடைபெறவுள்ளது. இதில் 48 நாடுகள் பங்கேற்கின்றன. 2022 ஆம் ஆண்டு போட்டியை விட 16 அணிகள் கூடுதலாகும்.

போட்டியை நடத்தும் 3 நாடுகள் நேரடியாக விளையாடும். மற்றவை தகுதிச் சுற்று மூலம் தேர்வாகும்.

ஜப்பான், நியூசிலாந்து, ஈரான், நடப்பு சம்பியன் ஆர்ஜென்டினா, உஸ்பெகிஸ்தான், தென்கொரியா, ஜோர்டான் ஆகிய நாடுகள் ஏற்கனவே தகுதி பெற்று இருந்தன.

நேற்று முன்தினம் நடைபெற்ற தகுதிச் சுற்று போட்டிகள் மூலம் 5 முறை சம்பியனான பிரேசில், ஈக்வடார், அவுஸ்திரேலியா ஆகிய 3 அணிகள் உலகக்கோப்பை கால்பந்து போட்டிக்கு தகுதி பெற்றன.



தென் அமெரிக்காவுக்கான தகுதி சுற்று ஆட்டம் ஒன்றில் பிரேசில்-பராகுவே அணிகள் மோதின. இந்த ஆட்டம் பிரேசில் நாட்டில் உள்ள சாவ் பாவ்லோ நகரில் நடந்தது. இதில் பிரேசில் அணி 1-0 என்ற கோல் கணக்கில் பராகுவேயை வீழ்த்தியது. ஆட்டத்தின் 44ஆவது நிமிடத்தில் பிரேசில் அணிக்காகவின் சியஸ் ஜூனியர் கோல் அடித்தார்.

இந்த வெற்றி மூலம் பிரேசில் அணி 25 புள்ளிகளுடன் உலகக் கோப்பை போட்டிக்கு தகுதி பெற்றது. அந்த அணி 23 ஆவது முறையாக உலக கோப்பை போட்டிக்கு முன்னேறியுள்ளது. ஈக்வடார்-பெரு அணிகள் மோதிய ஆட்டம் கோல் எதுவுமின்றி "டிரா" ஆனது. இதன் மூலம் ஈக்வடார் அணியும் 25 புள்ளிகளுடன் உலகக் கோப்பை போட்டிக்கு தகுதி பெற்றது. அந்த அணி 5ஆவது தடவையாக முன்னேறி இருக்கிறது. மற்ற ஆட்டங்களில் பொலிவியா 2-0 என்ற கோல் கணக்கில் சிலியையும் ,உருகுவே 2-0 என்ற கணக்கில் வெனிசுலாவையும் தோற்கடித்தன. ஆர்ஜென்டினா-கொலம்பியா அணிகள் மோதிய ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் "டிரா" ஆனது.

ஆசிய கண்டத்துக்கான தகுதிச் சுற்று ஆட்டம் ஒன்றில் அவுஸ்திரேலியா-சவுதி அரேபியா அணிகள் மோதின. இதில் அவுஸ்திரேலியா 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் அந்த அணி "சி" பிரிவில் 2 ஆவது இடத்தைப் பிடித்து உலகக் கோப்பை போட்டிக்கு தகுதி பெற்றது. அவுஸ்திரேலியா 7ஆவது முறையாக உலகக் கோப்பையில் விளையாட உள்ளது.(நி-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3325

விதுஷா




சிவதரன்




பவிசன்




சிந்துஜா




ரகுராம்




டிலக்சன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியின் இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலாளர் ம.ப.தயானந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் க.விஜிதரன் ஆகியோரும் கலந்து கொள்ள உள்ளனர். (நி-90)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகப் பெருஞ் சாந்திப் பெருவிழா இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 15 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு வைரவர் சாந்தி உற்சவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (8)

## விடுவிக்கப்பட்ட கைதிகளின் பதிவுகள் ஆராய்வு

### பதற்றத்தில் சிறை அதிகாரிகள்

(கொழும்பு)

விசேட தினங்களில் ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட கைதிகளின் பட்டியலில் பெயர்கள் சேர்க்கப்படாத கைதிகள் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பான விசாரணை தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களம் பல மூத்த சிறை அதிகாரிகளிடம் விசாரணை நடத்த தயாராகி வருகிறது.

சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்ட கைதிகளை அடையாளம் காணும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

அவர்களை கைது செய்து மீண்டும் சிறையில் அடைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சில காலமாகவே இது போன்ற சம்பவங்கள் சிறையில் நடந்து வருவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. "இந்த சம்பவங்கள் அனுராதபுரம் சிறையில் மட்டு மல்ல. வேறு பல சிறைகளிலும் நடந்துள்ளன.

எனவே, அனைத்து சிறைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்ட கைதிகளின் பதிவுகள் ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. விசாரணைகள் முடிவடையும் நேரத்தில் மேலும் பல சிறை அதிகாரிகள் கைது செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்," என்று மூத்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (நி-8)

## கொழும்பு நோக்கி சென்ற பேருந்து விபத்து

### 15 பேர் காயம்,10 வாகனங்கள் சேதம்



(கொழும்பு)

மொனராகலையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பேருந்து ஒன்று அவிசாவளை பகுதியில் நேற்றுக் காலை விபத்துக்குள்ளாகி உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் 15 பேர் காயமடைந்த நிலையில் அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மொனராகலையிலிருந்து கொழும்பை நோக்கி பயணிகளுடன் பயணித்த பேருந்து ஒருகொடவத்தையில் வீதி யோரம் தொடராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக வாகனங்கள் மீது பின்புறமாக மோதியதால் விபத்து ஏற்பட் டுள்ளது

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



N.M.ABDULLAH



B.S.M.SHARAFUL ANAM



M.ROYES



R.F.RISLA



யாழ்ப்பாணம் மாநகர சபையை அலங்கரிக்கும் எமது நான்கு யாழ் முஸ்லிம் பிரமுகர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்.
மாஷா அல்லாஹ்.

Kalabooshanam Fareed Iqbal
JAFFNA MUSLIM SOCIETY MEDIA

(C-3180)

# INVITATION FOR BIDS (IFB)

## Poonakary Pradeshiya Sabha, Poonakary

1. The **Chairman, Divisional Procurement Committee,** on behalf of the **Poonakary Pradeshiya Sabha** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for Contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building or road construction for grade mentioned in the table below.

   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of Public Contract Act No 03. Of 1987 for the contracts exceed 5 Million works. The Original certificate of Registration (PCA 03) shall be submitted with the bid."
4. Qualification requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | Document Issuing/Purchasing Period | | | | From 12.06.2025 until 26.06.2025 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | | At 10.30 A.M on 20.06.2025 | | | | |
| | Closing and Opening of Bids | | | | At 02.30 P.M on 27.06.2025 | | | | |
| Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security/ Refundable Cash Deposit | |
| | | | | | | | | Amount (Rs.) | Validity Period |
| MA/NP/KN/POPS/2025/OS/01 | Renovation of Mulankavil Park fencing work | PSDG/ Maintenance | 2.12 | 84 | C9 or above (Buildings) | 3,000.00 | 15-August-2025 | 32,000.00 | 12-September-2025 |

6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Poonakary Pradeshiya Sabha, Poonakary, Kilinochchi (T.P:021 228 2666, Fax: 021 228 4572 email: poonakaryps@yahoo.com) from 9:00 hrs to 15:00 hrs. During the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Poonakary Pradeshiya Sabha, Poonakary, Kilinochchi on or before 14.30 Pm as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend in person or vital in the address above.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, **Secretary, Poonakary Pradeshiya Sabha, Poonakary, Kilinochchi. Commencing at 10.30 AM as stated in table above.**
9. All Bids must be accompanied by either Bid security or refundable cash deposit as per the information given in the Tables.

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Poonakary Pradeshiya Sabha,**
**Poonakary.**

(C-3177)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களே அவதானம்!

# கரையொதுங்கும்

## பிளாஸ்ரிக் மூலப்பொருட்கள்

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாண மாவட்டத்தின் புங்குடுதீவு தெற்கு கடற்கரையோர பகுதி, குறிகட்டுவான், நயினாதீவு மற்றும் நெடுந்தீவு கடற்கரை யோர பகுதிகளில் தற்போது பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் தயாரிப்புக்கான மூலப்பொருள் பெருமளவில் கரையொதுங்கி வருவதாக கடற்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட கடற்சூழல் உத்தி யோகத்தர்களினால் அடையாளம் காணப் பட்டு அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.**



மேற்படி அடையாளம் காணப் பட்ட பொருட்கள் பிளாஸ்ரிக் மற் றும் பொலித்தீன் தயாரிப்புக் கான பிரதான மூலப்பொருள் என்பதுடன் இது சூழலுக்கும் மனிதனுக்கும் பாதிப்பை ஏற் படுத்தக்கூடியது.

அந்தவகையில் பொதுமக்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் விழிப்புணர்வுடன் நடந்து கொள்வதுடன் இப் பொருட்களை தொடுதல் மற்றும் எடுத்துச் செல்லுதலை தவிர்க்குமாறும் அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கடற் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் உதவி முகாமையாளருக்கு அறிக் கையிடப்பட்டுள்ளதுடன் இதனை அப்புறப் படுத்தல் தொடர்பாக உரிய பொறிமுறை எதிர்வரும் நாட்களில் முன்வைக்கப்படும் என்பதனை அரசாங்க அதிபர் அறிவித்துள் ளார் (8-33)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 350 | 250 | 450 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 650 | 650 | 700 |
| தக்காளி | 650 | 500 | 450 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 250 | 280 | 250 |
| கோவா | 550 | 550 | 350 | 600 |
| கரட் | 750 | 800 | 700 | 900 |
| பூசணி | 180 | 150 | 130 | 200 |
| புடோல் | 150 | 200 | 150 | 200 |
| வாழைக்காய் | 120 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 150-350 | 400 | 380 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 130 | 150 | 120 |
| பாகற்காய் | 500 | 800 | 600 | 1000 |
| வெண்டக்காய் | 150 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 300 | 200 | 300 | 150 |
| லீக்ஸ் | 480 | 450 | 350 | 600 |
| பீற்றூட் | 600 | 550 | 350 | 600 |
| கறிமிளகாய் | 800 | 500 | 550 | 1000 |
| முருங்கைக்காய் | 1800 | 1200 | 1250 | 1600 |
| போஞ்சி | 650 | 600 | 480 | 900 |
| கத்தரிதம்புள்ள | 150 | 350 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 60-150 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 280 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 150 | 100-180 | 150-200 |
| இராசவள்ளி | 700 | 600 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 600 | 600 | 700 | 600 |
| முள்ளங்கி | 200 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | 100 | -- | 250 |

# இராசிபலன்

**12.06.2025**
**வைகாசி 29, வியாழக்கிழமை**
**பிரதமை பிற்பகல் 2.42 மணிவரை**
**மூலம் முன்னிரவு 10.24 மணிவரை**

**சுபநேரம் 7.22-8.52 மணிவரை**
**இராகுகாலம் 1.22-2.52 மணிவரை**
**திருஞானசம்பந்தர் குருபூசை**

**சந்திராஷ்டமம்- கார்த்திகை, ரோகிணி**

**வளவன்**

**மேஷம்**
அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்**
எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பல நாட்களாக செய்ய நினைத்த வேலையை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்**
நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்**
தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், சுபவிரயங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்**
குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், விரயங்கள் மேலோங்கும் நாள், பிரயாண பயமுண்டு.

**சிம்மம்**
பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.

**விருச்சிகம்**
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழில் வளர்ச்சி கூடும், பணப் புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**கும்பம்**
செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்**
நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், கல்யானக் கனவுகள் நனவாகலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்

**கன்னி**
விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு**
ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், போசன சுகமுண்டு, எதிர்பாராத காரியமொன்று நடைபெற்று இன்பம் தரும்.

**மீனம்**
சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, செய்தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு

**பிறருக்கு உதவி செய்வதே வாழ்க்கையாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு சிகரட்டுகளுடன் இந்திய பிரஜை கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரட்டுகளுடன் இந்திய பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று புதன்கிழமை அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.


கைதுசெய்யப்பட்டவர் 45 வயதுடைய இந்திய பிரஜை ஒருவர் ஆவார்.

சந்தேக நபரான இந்திய பிரஜை நேற்றுஅதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரான இந்திய பிரஜை கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 15,000 வெளிநாட்டு சிகரட்டுகள் அடங்கிய 75 சிகரட்டு கட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

# தண்டவாள பாதையில் குழி ரயில் சேவைகள் பாதிப்பு



(கொழும்பு)

கண்டியில் ரயில் மார்க்கத்தில் திடீரென குழி ஒன்று ஏற்பட்டுள்ளமையினால் கண்டி மற்றும் பேராதனை நிலையங்களுக்கு இடையிலான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கண்டி நோக்கிச் செல்லும் ரயில் சேவைகளும் , கண்டி ரயில் நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ரயில் திணைக்கள கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது. (நி-8)

# பெறுகை அறிவித்தல்
## பூநகரி பிரதேச சபை,பூநகரி

**மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG-2025)**

01) தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பூநகரி பிரதேசசபை, பூநகரி தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.

02) தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03) கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

04) அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பூநகரி பிரதேச சபை, தொலைபேசி **021 228 2666**,தொலைநகல் **021 228 4572**, இல் இருந்து மேலதிக தகவல்களை அலுவலக நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் **12.06.2025** ஆம் திகதியிலிருந்து **26.06.2025** ஆம் திகதி வரை மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

05) அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், பூநகரி பிரதேசசபை, பூநகரி என்னும் முகவரியில் **12.06.2025** ஆம் திகதியிலிருந்து **26.06.2025** ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

06) விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பூநகரி பிரதேசசபை, பூநகரி எனும் முகவரிக்கு **27.06.2025** ஆம் திகதிபிற்பகல் **14.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே **(27.06.2025 பி.ப 14.00)** வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

07) சமர்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக் குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

08) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிடம் இருந்து பெற்று இணைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | கேள்வித்தொகை (VAT) உள்ளடங்கலாக | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| PSDG/NP/KN/POPS/2025/RE/01 | Purchasing & Fixing of solar panel set at Library common Hall | 3.46Mn | 52,000.00 | 12.09.2025 |

**சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன்,**
**தலைவர்,உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**பூநகரி பிரதேச சபை,பூநகரி.**

(சி-3178)

## நல்லூர் பிரதேசசபை கொக்குவில் உப அலுவலக ஆதன பெயர்மாற்றம் வரியிறுப்பாளரின் பெயரை ஆதனப்பதிவேட்டில் உட்புகுத்தல்

நல்லூர் பிரதேசசபையின் கொக்குவில் உபஅலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-13, அரசடி வீதி, ஆதன இல 23/1 எனும் ஆதனமானது சின்னப்பு அப்பா உ.கோ V.சுப்பையா எனவும் தற்போதைய உரிமையாளர் நடராசா பெண் விக்னேஸ்வரி என்ற விபரத்தில் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்தை திரு.திருமதி.நடராசா தனுஷ்யன் பபிதா என்பவர்கள் தங்களது பெயரை ஆதனப்பதிவேட்டில் வரியிறுப்பாளர்களாக பதிவு மேற்கொள்ள விண்ணப்பித்துள்ளார்.

1. விண்ணப்பதாரி பிரசித்த நொத்தாரிசு செல்வி ஞானலோஜினி சிவஞானம் அவர்கள் முகதாவில் 12779 ஆம் இலக்கத்தில் 12.02.2018 ஆம் திகதிய சீதன உறுதியின்படியும் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் T.தங்கராஜா அவர்களினால் 624 ஆம் இலக்கத்தில் 10.09.1992 ஆம் திகதி அளந்து வரைந்த படத்தின்படி நில பரப்பு 01 குளி 11.47 ஆகும்.
2. விண்ணப்பதாரியின் உறுதியின் ஆதன அட்டவணைப்படியும் நில அளவைப் படத்தின் படியும் எல்லைகள் கிழக்கு - துண்டு 02 ஆகிய பாதையும் விஜயதீபன் பெண் கஜநிதியின் ஆதனம் வடக்கு- பொன்னன் பெண் நாகமுத்துவும் ஏனையோரும் மேற்கு- பரம்சோதி பெண் வசந்தா வினோதனம் தெற்கு -சுரேஸ் பெண் சர்மிளாவின் ஆதனமும் என்ற விபரங்களில் காணப்படுகின்றது.
3. விண்ணப்பதாரியினால் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் ஆரம்ப உறுதியானது பிரசித்த நொத்தாரிசு செல்வி ஞானலோஜினி சிவஞானம் அவர்கள் முகதாவில் 907ஆம் இலக்கத்தில் 2003-10-13 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் சாதனமாகும்.
4. ஆரம்ப உறுதி வெளிப்படுத்தல் சாதனமாக காணப்படுவதாலும் ஆரம்ப உறுதி முடித்தவர்கள் அடியற்று இறக்க பிதாவழி முதுசம் என்று திரு.வேலன் துரையன் உறுதி ஏதும் வரையாமல் அடியற்று இறக்க வேலன் துரையனின் மகன் துரை தவராசா என்பவர் தனது பிதாவழி முதுசம் என்ற அடிப்படையில் தனது மகளான தனுஷ்யன் பபிதா என்பவருக்கு சீதனமாக கொடுத்துள்ளார்.
5. விபரங்களடங்கிய ஆதனத்தை ஆதனப்பதிவேட்டில் வரியிறுப்பாளரான பதிவு மேற்கொள்ள நல்லூர் பிரதேச சபைக்கு வெளிப்படைத்தன்மை அவசியமாகும். அதன்பிரகாரம் சட்ட ஆலோசகரின் பரிந்துரையின் பிரகாரமும் குறித்த ஆதனத்தை ஆதனப்பதிவேட்டில் திரு.திருமதி தனுஷ்யன் பபிதா என்பவர்களை வரியறுப்பாளர்களாக பதிவு மேற்கொள்ளும் பொருட்டு பத்திரிகையில் செய்தியாக பிரசுரிக்கப்படுகின்றது.
6. இவ்வாதனம் வெளிப்படுத்தல் சாதனமாக காணப்படுவதாலும் குறித்த செயற்பாடுகளானவை சட்டபூர்வமான வெளிப்படைத்தன்மை கொண்டதும் பொறுப்பு வாய்ந்த செயற்பாடாக காணப்படுவதாலும் ஆதனபெயர்மாற்று விண்ணப்பதாரரின் கோரிக்கைக்கமைவாகவும் இவ்வாதனம் தொடர்பான விபரங்கள் யாழ் குடாவிலிருந்து வெளிவரும் பத்திரிகையில் செய்தியாக பிரசுரிக்கப்படுகின்றது.

குறித்த ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்ட பூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ. வெளி நாட்டில் வசிப்பவர்களாயிருந்தால் இங்குள்ள உறவினர் மூலமாகவோ ஆட்சேபனைகளை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனைகள் தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர் திரு.திருமதி தனுஷ்யன் பெண் பபிதா என்பவரின் பெயருக்கு ஆதனபெயர்மாற்றம் செய்வதனால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.( சட்டபூர்வமான ஆவணங்களைச் சமர்ப்பிக்காத அனைத்து முறைப்பாடுகளையும் நிராகரிக்கும் அதிகாரம் நல்லூர் பிரதேசசபைக்கு உண்டு. என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்).

**செயலாளர்,**
**நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.**

(C-3179)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 9 ஐ.எஸ். தீவிரவாதிகளை தூக்கிலிட்ட ஈரான்!



(டெஹ்ரான்)

2018 தாக்குதலுக்குப் பின்னர் கைது செய்யப்பட்ட இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) குழுவின் ஒன்பது தீவிரவாதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரானிய நீதித்துறையின் மிசான் செய்தி நிறுவனம் செவ்வாயன்று மரண தண்டனையை அறிவித்தது.

மூன்று ஈரானியப் படையினரை கொன்ற ஈரானின் துணை இராணுவப் புரட்சிகர காவற்படையுடன் மோதலில் ஈடுபட்ட பின்னர் போராளிகள் தடுத்து வைக்கப்பட்டனர்.

ஈரான் தூக்கிலிடுவதன் மூலம் மரண தண்டனையை நிறைவேற்றுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

## வரதட்சணையாக 100 புனுகு பூனைகள்



(ஹனோய்)

வியட்நாமில் மகளுக்கு தங்கம், வைர நகைகள், ரொக்கம் ஆகியவற்றுடன் 100 புனுகு பூனைகளையும் பெற்றோர் வரதட்சணையாக வழங்கியுள்ளனர். புனுகு பூனைகள் "காபி லுவாக்" எனப்படும் விலை உயர்ந்த காபி கொட்டைகள் தயாரிப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தென்கிழக்கு ஆசிய நாடான வியட்நாமைச் சேர்ந்தவர் தொழிலதிபர் ஹாங் சி தாம். இவர் தன் 22 வயது மகளுக்கு சமீபத்தில் திருமணம் நடத்தி வைத்தார்.

மகளுக்கு வரதட்சணையாக 25 தங்க கட்டிகள், 30 லட்ச ரூபாய் ரொக்கம் மற்றும் நிறுவன பங்குகள் உள்ளிட்டவற்றை வழங்கினார்.

அத்துடன் 100 புனுகு பூனைகளையும் வரதட்சணையாக தந்தார். இவை விலை உயர்ந்த காபி லுவாக் எனப்படும் காபி கொட்டைகள் தயாரிப்பில் பங்கு வகிக்கின்றன.

காபி செடியின் பழுத்த காபி செர்ரி பழங்கள் புனுகு பூனைக்கு வழங்கப்படும். புனுகு பூனையின் வயிற்றில் இவை ஓரளவு செரிமானம் ஆகும்.

அதன் வயிற்றில் உள்ள நொதிகள் காபி கொட்டையின் புரதங்களை உடைத்து, காபிக்கு தனித்துவமான சுவையையும், குறைந்த கசப்பையும் அளிக்கிறது.

செரிமானம் ஆகாத காபி கொட்டைகள், புனுகு பூனையின் கழிவுடன் வெளியேறும். அதிலிருந்து காபி கொட்டைகளை சேகரித்து நன்கு சுத்தம் செய்து, உலர்த்தி, வறுத்து காபி லுவாக் பொடி தயாரிக்கப்படுகிறது. (நி-8)

# இஸ்ரேலின் இரகசிய அ...
# தாக்கி அழி...
## ஈரானின் எச்சரிக்...

(டெஹ்ரான்)

**ஈரான் மீது இராணுவத் தாக்குதல் நடத்தப்பட்டால், இஸ்ரேலில் உள்ள இரகசிய அணுசக்தி நிலையங்களை உடனடியாக குறிவைப்போம் என்று ஈரானின் ஆயுதப் படைகள் எச்சரித்துள்ளன.**

இதற்காக, ஈரானின் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சில் சமீபத்தில் ஒரு முக்கிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலிடமிருந்து முக்கியமான உளவுத்துறைத் தகவல்களை பெற்றுள்ளதாக ஈரானின் உளவுத்துறை அமைச்சர் இஸ்மாயில் கதீப் சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, இந்த எச்சரிக்கை முக்கியத்துவம் பெறுகிறது.

உளவுத்துறை ஆதாரங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களுடன் இஸ்ரேலில் உள்ள

## பசுபிக் பெருங்கடலில் சீன விமானம் தாங்கிக் கப்பல்கள்
## ஜப்பான் கவலை

(டோக்கியோ)

பசுபிக் பெருங்கடலில் முதல் முறையாக இரண்டு சீன விமானம் தாங்கிக் கப்பல்கள் ஒரே நேரத்தில் காணப்பட்டதாக ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சீன விமானம் தாங்கிக் கப்பல் ஷான்டாங் ஜப்பானின் "பிரத்யேக பொருளாதார மண்டலம்" வழியாகப் பயணித்து, பசுபிக் பெருங்கடலின் வடக்கு நீரில் அதன் போர் விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களுடன் தரையிறங்கும் மற்றும் புறப்படும் பயிற்சிகளை நடத்தியதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. கண்காணிப்பு பலப்படுத்தப்படும் என்றும், சீனாவிற்கு இதுகுறித்து செய்தி அனுப்பப்பட்டுள்ளதாகவும் ஜப்பானிய தலைமை அமைச்சரவை செயலாளர் யோஷிமாசா ஹயாஷி தெரிவித்தார்.

அரசாங்கத்தின் உயர்மட்ட செய்தித் தொடர்பாளர் ஹயாஷி, சீனாவின் அதிகரித்து வரும் கடல்சார் நடவடிக்கைகள் கவலையை ஏற்படுத்தி உள்ளது.

இருப்பினும், சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் லின் ஜியான், விமானம் தாங்கிக் கப்பலின் நடவடிக்கைகள் சர்வதேச சட்டங்கள் மற்றும் சர்வதேச நடைமுறைகளுக்கு உட்பட்டது என்று கூறினார்.

எங்கள் தேசியக் கொள்கை இயற்கையில் தற்காப்பு சார்ந்தது. ஜப்பான் அந்த நடவடிக்கைகளைப் புறநிலையாகவும் பகுத்தறிவுடனும் பார்க்கும் என்று நாங்கள் நம்புகிறோம் என்று லின் தெரிவித்தார். (நி-8)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# அணுசக்தி தளங்களை
# க்கத் தயார்!
# கையால் பதற்றம்



இரகசிய அணுசக்தி தளங்களை உள்ளிட்ட முக்கிய இலக்குகளை அடையாளம் கண்டுள்ளதாக ஈரானின் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சில் தெரிவித்துள்ளது.

ஈரானிய நலன்களுக்கு எதிராக இஸ்ரேல் ஏதேனும் இராணுவ நடவடிக்கை எடுத்தால், இந்த இலக்குகள் மீது பழிவாங்கும் தாக்குதல்களை நடத்த அதன் ஆயுதப் படைகள் தயாராக இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இஸ்ரேலிடம் அணு ஆயுதங்கள் இருப்பதாக பலர் நம்பினாலும், அந்த நாடு இதை அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தவோ மறுக்கவோ இல்லை என்பது கவனிக்கத்தக்கது. (நி-8)

## கிரேட்டா தன்பெர்க்கை
# சொந்த நாட்டிற்கு அனுப்பிய இஸ்ரேல்

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற நடைமுறைகளை உலகிற்கு அம்பலப்படுத்தும் நோக்கமாக காசா பயணம் மேற்கொண்ட சுற்றுச்சூழல் ஆர்வலர் கிரேட்டா தன்பெர்க் உள்ளிட்டோர்.

இஸ்ரேல் இராணுவம் அவர்களை தடுத்து நிறுத்தியது. தற்போது தன்பர்க்கை சொந்த நாட்டிற்கு அனுப்பி வைத்துள்ளது.

காசாவுக்குள் கடந்த 3 மாதங்களாக உணவு மற்றும் உதவிப் பொருட்கள் செல்வதை இஸ்ரேல் தடுத்தது. இந்நிலையில் காசாவிற்கு உதவிப் பொருட்களை ஏற்றிச்சென்ற மெடலின் என்ற கப்பலை இஸ்ரேல் சிறை பிடித்துள்ளது. சுவீடனை சேர்ந்த காலநிலை ஆர்வலர் கிரேட்டா தன்பெர்க் தலைமையிலான 12 தன்னார்வலர்களுடன் அந்த கப்பல் ஜூன் 1ஆம் திகதி இத்தாலியின் மத்திய தரைக்கடல் தீவுப் பகுதியான சிசிலியிலிருந்து புறப்பட்டது.

சர்வதேசச் சட்டத்தை மீறும் இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற நடைமுறைகளை உலகிற்கு அம்பலப்படுத்துவதே இந்த பயணத்தின் நோக்கமாகும். காசாவில் உள்ள ஒரே பெண் மீனவரின் பெயரால் "மேடலின்" என்று கப்பலுக்கு பெயரிடப்பட்டது. ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தின் பிரெஞ்சு உறுப்பினர் ரிமா ஹாசன், நடிகை லியான் கன்னிங்ஹாம் மற்றும் ஜெர்மன் மனித உரிமை ஆர்வலர் யாஸ்மின் அகார் ஆகியோரும் இந்தப் பயணக் குழுவில் இருந்தனர்.

கப்பலை கைப்பற்றிய இஸ்ரேல், அதில் உள்ள பயணிகள் காசாவிற்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும், அவர்கள் தங்கள் நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் அறிக்கை வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் கிரேட்டா தன்பெர்க்கை, அவரது சொந்த நாடான சுவீடனுக்கு இஸ்ரேல் அனுப்பி வைத்துள்ளது. பிரான்ஸ்க்கு அவர் விமானத்தில் ஏற்றி விட்டுள்ளனர். பிரான்ஸ் சென்று அங்கிருந்து சுவீடன் செல்கிறார்.

தடுத்து நிறுத்தப்பட்டுள்ள மற்ற ஆர்வலர்களையும் விடுவிக்க வேண்டும் என தன்பர்க் வலியுறுத்தியுள்ளார். மேலும், தடுத்து நிறுத்தியபோது குழப்பமான, நிச்சயமற்ற சூழ்நிலை உருவானது என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

## மூடப்படுகிறது ஜெட்ஸ்டார் ஆசியா
## சுமார் 500 ஊழியர்கள் பணிநீக்கம்




(சிங்கப்பூர்)

சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட குறைந்த கட்டண விமான நிறுவனமான ஜெட்ஸ்டார் ஆசியா ஜூலை 31 ஆம் திகதி அன்று அதன் செயற்பாடுகளை நிறுத்தவுள்ளது.

பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு முழுக் கட்டணமும் திரும்ப வழங்கப்படும் என்று விமான நிறுவனம் கூறியுள்ளது.

இந்த மூடல் காரணமாக சிங்கப்பூரில் 500 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்படுவார்கள்.

ஜெட்ஸ்டார் ஆசியாவின் மூடல் அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்ட ஜெட்ஸ்டார் ஏர்வேஸின் செயற்பாடுகளையோ அல்லது ஜெட்ஸ்டார் ஜப்பானின் செயற்பாடுகளையோ பாதிக்காது என்று அதன் பகுதி உரிமையாளரான குவாண்டாஸ் தெரிவித்துள்ளது.

ஜெட்ஸ்டார் ஆசியா அடுத்த ஏழு வாரங்களுக்கு படிப்படியாகக் குறைக்கப்பட்ட சேவையை வழங்கும்.

மேலும், பயணிகளின் விமானம் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு அறிவிக்கப்படும்.

ஜூலை 31 மூடலுக்குப் பின்னர் விமானத்தில் பயணிக்க பயணச்சீட்டுகள் உள்ள பயணிகளை விமான நிறுவனம் தொடர்புகொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சில வாடிக்கையாளர்கள் குவாண்டாஸ் குழுமத்தால் இயக்கப்படும் மாற்று விமானங்களுக்கு மாற்றப்படலாம்.

பயண முகவர் அல்லது தனி விமான நிறுவனம் மூலம் முன்பதிவு செய்தவர்கள் அந்த வழங்குநர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு ஜெட்ஸ்டார் ஆசியா அறிவுறுத்துகிறது.

சிங்கப்பூரிலிருந்து மலேசியா, இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய இடங்களுக்குச் செல்லும் விமானங்கள் உட்பட ஆசியா முழுவதும் 16 வழித்தடங்கள் மூடலால் பாதிக்கப்படும்.

குவாண்டாஸ் ஆசியாவில் வளர்ந்து வரும் குறைந்த கட்டண விமானப் பயணச் சந்தையில் கால் பதிக்க முயன்றதால், 2004 ஆம் ஆண்டு ஜெட்ஸ்டார் ஆசியா தொடங்கப்பட்டது.

எனினும், ஏர் ஏசியா மற்றும் ஸ்கூட் உள்ளிட்ட பிற குறைந்த கட்டண விமான சேவைகளின் அதிரித்த போட்டியை அது எதிர்கொண்டது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிரிடப்படாத காணிகளை குறிவைத்த அரசாங்கம்



(கொழும்பு)

நாட்டின் அனைத்து பயிரிடப்படாத காணிகளையும் ஒன்றாக இணைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போது, விவசாய அமைச்சர் கே.டி லால் காந்த இதனை தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையுடன் இணைந்து, கந்தளாய் சீனித் தொழிற்சாலை தளத்தில் 2,000 ஏக்கர் சோள பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் பயிரிடப்படாத நிலங்களைப் பயன்படுத்தி நாட்டின் விவசாய உற்பத்தியை மேம்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1994-இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor<br>தொ.இ: B/15615 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>12 இல் செவ்<br>கி.பா:32<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Bsc,Engineer<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/15638 |
| பிறப்பு:1988 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>கி.பா: 17 1/2<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: BSc,MSc,MED, Teacher<br>எதிர்பார்ப்பு: Graduates. அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15616 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc, Teacher<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/15641 |
| பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம்<br>கி.பா: 42 1/4<br>உயரம்:6"<br>தகைமை/தொழில்:MBBS,Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor<br>தொ.இ: B/15617 | பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா : 36 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15642 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>கி. பா: 19 1/2<br>6 இல் சூரி செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Manager (Canada)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15619 | பிறப்பு: 1991 RC<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் : BSc,Teacher<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15646 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>1 இல் சூரி செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: கனடா<br>எதிர்பார்ப்பு: தகுதியானபெண்(PRஉள்ளவர்)<br>தொ.இ: B/15621 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 63<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc, AI<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/15647 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 392



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## கொட்டாங்கச்சி சாமியார்

"புத்தாண்டு வாழ்த்துக்கள்!" என்று சொல்லிக்கொண்டே எங்கள் வீட்டுக்கு வந்தார் என்னுடைய நண்பர்.

"வாங்க சார்!" என்று கூப்பிட்டு வீட்டுக்குள்ளே உட்கார வைத்தேன் "என்ன சாப்பிடுறீங்கள்! காபியா? டீயா?" என்று கேட்டேன்.

இன்றையிலேயிருந்து புதிதாக ஒரு நல்ல பழக்கத்தைக் கடைப்பிடிக்கப் போகிறேன்!" என்றார்.

என்ன அது? என்று கேட்டேன்.

வேண்டியவர்கள் எதைக் கொடுத்தாலும் அதை வேண்டாம் என்று சொல்லாமல் சாப்பிடுவது! என்றார்.

அப்படி என்றால் இன்றைக்குத் தகவலை அவசியம் நீங்கள் கேட்க வேண்டும்! என்றேன்.

சொல்லுங்கள். கேட்கிறேன் என்றார்.

நான் சொல்ல ஆரம்பித்தேன். நண்பர் ஒருவர் எனக்கு எழுதியனுப்பியிருந்த கதை.

ஒரு ஊரிலே ஒரு சாமியார் இருந்தார். ஒவ்வொரு ஊராக அவர் போய்க்கொண்டே இருப்பார். பேசமாட்டார். எப்போதும் மௌனவிரதம். அவர் இன்னொரு விரதம் வேறு வைத்திருந்தார். அதாவது யாராவது சாப்பாடு போடுகிறேன் என்று கூப்பிட்டுக் கொண்டு போய் எதைப் போட்டாலும் சாப்பிட்டு வருவது என்பது விரதம். தனக்குப் பிடிக்குதோ பிடிக்கவில்லையோ எப்படியாவது கஷ்டப்பட்டு சாப்பிட்டு விடுவார். வாயே திறக்க மாட்டார். சாப்பிடுவதற்கு மட்டும்தான் வாயைத் திறப்பார்! பேசமாட்டார்! இப்படிப் பட்டவர் ஒருநாள் ஒரு தம்பதி வீட்டுக்குப் போனார். அவர்கள் தான் இவரை அழைத்துக்கொண்டு போனார்கள்.

உட்கார வைத்து இலை போட்டார்கள். சாப்பாடு பரிமாறி, இவரும் சாப்பிட ஆரம்பித்தார். அவர்களுக்கு ஒரு கவலை

அதாவது. இந்த சுவாமி எப்போதும் மௌன விரதத்திலே இருக்கிறவர். அவராக தனக்கு இன்னும் வேண்டும் என்று கேட்டு வாங்க முடியாது அதனாலே இவர் எதை இரசித்துச் சாப்பிடுகிறாரோ அதை இன்னமும் போடலாம் அப்படி என்று நினைத்து அவரை மிகவும் அக்கறையாக கவனித்துக்கொண்டே இருந்தார்கள்.

அன்றைக்கு சமையலிலே எதிர்பாராத விதமாக ஒரு தேங்காய் கொட்டாச்சி துண்டு ஒன்று சின்னதாக கலந்து விட்டது. அது சுவாமியார் இலையிலே இருந்தது. அவர்தான் எதையும் மிச்சம் வைக்காமல் சாப்பிடுபவர் ஆச்சே! அதனாலே கடைசியாக மிகவும் கஷ்டப்பட்டு அந்தக் கொட்டாங்கச்சி ஓட்டை எப்படியோ கடித்து மென்று முழுங்கி விட்டார்.

அந்தக் கணவர் இதைப் பார்த்து விட்டார். உடனே மனைவி காதில் ரகசியமாக ஏதோ சொன்னார். அந்த அம்மா உடனே கொல்லைப் பக்கம் ஓடினார்கள். ஒரு கொட்டாங்கச்சியைக் கழுவி எடுத்துக்கிட்டு வந்தார். அதை அம்மியிலே வைத்து பக்குவமாக நொறுக்கி சாமியார் இலையிலே வைத்துவிட்டார். மிகவும் பணிவாக "சாப்பிடுங்க சாமி" என்று வேண்டிக்கொண்டார்கள். "இது உங்களுக்குப் பிடிக்கும் என்று எங்களுக்குத் தெரியாமல் போய் விட்டது மன்னிக்கணும்!" என்று கேட்டுக்கொண்டார்கள்.

சாமியார் முழித்துப் பார்த்தார். தன் விரதப் பேர்லேயே அவருக்கு அசாத்திய கோபம் வந்துவிட்டது! மிகவும் நொந்து போய் விட்டார்.

என்னடா இது. இப்போதுதான் ஒரு துண்டை கடித்து மெதுவாக உள்ளே தள்ளினோம். அதுக்குள்ளே முழுக் கொட்டாங்கச்சியே வந்துவிட்டதே. என்ன செய்யப் போகிறோம் என நினைத்தார். அவர் கண்ணிலே தண்ணி தளும்ப ஆரம்பித்தது. விரதத்தை விட முடியாதே சாப்பிட்டே ஆக வேண்டுமே என்ன செய்வது? நீண்ட காலமாக கடைப்பிடிக்கின்ற விரதமே!

மெதுவாக அந்த ஓடை எடுத்து சாப்பிட ஆரம்பித்தார். கண் எல்லாம் கலங்கி போனது, இதை அந்தக் கணவன் பார்த்தார். மனைவியிடம் சொன்னார். "சுவாமிஜி கண்ணை கவனித்தீர்களா? அவ்வளவும் ஆனந்தக் கண்ணீர் கொட்டாங்கச்சிக்கும் அவருக்கும் எப்படி இவ்வளவு ஒரு சொந்தமோ தெரியவில்லை!" என்றார். அதற்கு அந்த அம்மா சொன்னார். "பெரிய யோகிகள் எல்லாம் இப்படித்தான். அவர்களுடைய செய்கை நமக்குப் பிடிபடாது! என்றார்.

"இவ்வளவு தூரத்திற்கு அதை ரசித்து ருசித்துச் சாப்பிடுவார் என்று தெரிந்திருந்தால். நாம் சமைத்திருக்கவே வேண்டாமே! நிறைய கொட்டாங்கச்சி பொறுக்கிக்கொண்டு வந்திருக்கலாமே! " என்று கவலைப்பட்டார்கள்.

இரு இதோ வந்துவிடுகிறேன் என்று அந்த கணவன் கொல்லைப் பக்கம் ஓடினார். அங்கே கிடந்த கொட்டாங்கச்சியையெல்லாம் பொறுக்கிக் கொண்டு வந்து கொட்டினார். அந்த அம்மா அவசர அவசரமாக அதை நொறுக்கி சாமியார் இலையிலே போட்டுக்கொண்டு இருந்தார்கள். அவரும் மென்று முழுங்கிக் கொண்டே இருந்தார். கணவர் பார்த்தார். ஒரு பெரிய கூடை இருந்தால் குடு, பக்கத்து வீட்டுக்கெல்லாம் போய்! பொறுக்கிக் கொண்டு வருகிறேன். என்றார். கூடையை எடுத்துக் குடுத்தார். அந்த அம்மா. அவர் அதை வாங்கிக்கொண்டு தெருப்பக்கமாக அவசரமாகப் போனார். அந்த அம்மா கொட்டாங்க்சி நொறுக்க அம்மிக் குழலியை எடுக்க அடுப்பங்கரைக்கு அவசரமாக போனார்கள்.

சாமியார் பார்த்தார். இனிமேல் தாக்குபிடிக்க முடியாது. இதுதான் சமயம் என்று நினைத்தார். அவசரமாக எழுந்திரித்தார். கொல்லைப் பக்கமாக ஓடி வேலியை தாண்டி குதித்தார். ஒரே ஓட்டம் மனைவி இதை பார்த்து விட்டார்கள். "சுவாமி கோவித்துக்கொண்டு போகிறார் சீக்கிரமாக ஓடிவாங்களேன்" என்று கத்தினார். கணவர் கூடையோடு ஓடி வந்தார். அதற்குள்ளே அந்த சாமியார் சிட்டாய்ப் பறந்து போய் விட்டார்.

எப்படி இருக்கு இந்தக் கதை? என்று கேட்டேன் நண்பரிடம் "ஹி! ஹி!" என்றார். "ஏன் இப்படி சிரிக்கிறீர்கள்?" என்றேன். ஆரம்பத்திலே நான் உங்களுக்கு சொன்னதை வாபஸ் வாங்கி கொள்கிறேன் என்றார்.

"இருந்தாலும் இன்றைக்கு புது வருடம். அதனாலே நாங்கள் எதைக் கொடுத்தாலும் நீங்கள் சாப்பிட்டுதான் ஆகணும்!" என்றேன்!

நண்பர் யோசித்தார். "சரி. அப்படி என்றால் எனக்கு டம்ளர் இல்லாத காப்பி மட்டும் குடுங்கள்! என்றார்.

எங்கே டம்ளரையும் சாப்பிட வேண்டி வந்துவிடுமோ? என்கின்ற பயம் அவருக்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘எங்கள் மண்ணை சுடுகாடாக்காதே’

# கனிய மணல் அகழ்வுக்கு எதிராக மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம்

## அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு!

(மன்னார்)

**காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றைய தினம் மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.**



மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழு மற்றும் சிவில், பொது அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் நேற்றைய தினம் புதன்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தலைமையில் ஆரம்பமான குறித்த கவனயீர்ப்பு பேரணியில் மன்னார் மாவட்டத்தில் உள்ள சிவில் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள்,சர்வமத தலைவர்கள், வர்த்தகர்கள், அரசியல் பிரதிநிதிகள் உள்ளடங்களாக ஆயிரக்கணக்கான மக்களும் பங்கு கொண்டனர்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து குறித்த கவனயீர்ப்பு பேரணி ஆரம்பமாகி பிரதான வீதியூடாக சென்று மன்னார் பஜார் பகுதியை சென்றடைந்தது.

பின்னர் பேரணியில் கலந்து கொண்டவர்கள் மன்னார் மாவட்டச்செயலகத்திற்கு முன்னால் ஒன்று கூடி பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வை உடனடியாக நிறுத்து.எங்கள் மண்ணை சுடுகாடாக்காதே!அடிக்காதே, அடிக்காதே எங்கள் வயிற்றில் அடிக்காதே! உள்ளிட்ட பல் வேறு வசனங்கள் எழுதப்பட்ட



பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு பேரணியில் பங்கேற்றனர்.

இந்த நிலையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு ஞானப்பிரகாசம் அடிகளாரும் வருகை தந்தார்.

மன்னார் மக்கள் எதிர்நோக்கும் குறித்த இரு பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் மன்னார் ஆயர் மற்றும் சர்வமத தலைவர்கள் இணைந்து மகஜரை கையளித்தனர்.

மகஜரை பெற்றுக் கொண்ட அரசாங்க அதிபர் மன்னார் மாவட்ட மக்கள் நீண்ட காலமாக காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறித்து நான் நன்கு அறிவேன் எனவும், மக்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் சர்வமத தலைவர்கள் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கும் வகையில் என்னிடம் கை அளிக்கப்பட்டுள்ள நிலையில்,நான் உடனடியாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பேன். என அவர் மேலும் தெரிவித்தார்.(8- 285)

# வவுனியாவில் விசேட நடவடிக்கை

## ✶ நால்வர் கைது
## ✶ 03 வாகனங்கள் பறிமுதல்



(வவுனியா)

வவுனியாவின் பல பகுதிகளில் வனவளத்திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையில் சட்ட விரோதமான முறையில் கடத்த முற்பட்ட முதிரை மரக் குற்றிகள் மீட்கப்பட்டுள்ளதாக வனவளத்திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

வனவளத்திணைக்களத்தினருக்கு கிடைத்த இரகசிய தகவலினை அடுத்து மாவட்ட வனவளத் திணைக்கள அதிகாரியின் நெறிபடுத்தலின் கீழ் வனவள உத்தியோகத்தர்கள் , விசேட அதிரடிப்படையினர் இணைந்து ஓமந்தை மற்றும் கூமாங்குளம் பகுதிகளில் விசேட நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந் நடவடிக்கையின் போது 27 முதிரை மரக்குற்றிகள் மீட்கக்கப்பட்டதுடன் மரக் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட இரு வாகனங்களும் மீட்கப்பட்டன.

இதேவேளை வவுனியாவில் உள்ள மரக்காளையிலிருந்து அனுமதி பெறப்படாத 13 லட்சம் பெறுமதியான தேக்கு மரப்பலகைகளும் மீட்கப்பட்டன.

அத்துடன் காடழிப்பில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் காடழிப்புக்குப் பயன்படுத்திய வாகனமும் கைப்பற்றப்பட்டது. குறித்த சம்பவங்கள் தொடர்பாக நால்வர் கைது செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)



இலங்கை புகையிரத நிலையங்களுக்கு இடையே மத்திய சுற்றாடல் அதிகார சபையால் நடாத்தப்பட்ட சிறந்த பசுமை புகையிரத நிலையத்திற்கான போட்டியில், பளை புகையிரத நிலையம் தேசிய ரீதியில் 6 ஆம் இடத்தையும் வட மாகாண ரீதியில் 1ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

# பாடசாலைகள் கல்வி அடைவு மட்டத்திற்கானது மட்டுமல்ல அவர்களை நல்ல தலைவர்களாக்கும் களமாக்க வேண்டும்

## ஸ்ரீதரன் எம்.பி தெரிவிப்பு

(கண்டாவளை)

இனத்தையும், மொழியையும் நேசிக்கின்ற அடுத்த தலைமுறையின் உருவாக்கம் தான், தனது இருப்புக்காகப் போராடும் ஒரு இனத்தின் எதிர்கால நம்பிக்கையாக அமைய முடியும். அத்தகையோர் தலைமுறையின் தோற்றத்திற்கு வழிகோலும் சமூகக் கடப்பாட்டைக் கொண்ட பாடசாலைகள், கல்வி அடைவு மட்டத்திற்கான தளங்களாக மட்டுமல்லாது, பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்கும், தலைமைத்துவ வாண்மைக்குமான தளங்களை ஏற்படுத்த வேண்டும். அத்தகைய [illegible] பணியை முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி செவ்வனே நிறைவேற்றி வருகிறது என நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

சிறீதரன் எம்.பியின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் 2.1மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கல்லூரியின் பிரதான மண்டபத்தை மாணவர்களின் பயன்பாட்டுக்கு கையளிக்கும் நிகழ்வின் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கல்லூரியின் முதல்வர் அரசரட்ணம் பங்கையற்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-8-315)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 796





"கடவுள் என்ன ஏற்படுத்தினால் என்ன? முதுமை அடைவதும் அடையாததும் நம்முடைய கையிலே தானே இருக்கிறது?" என்றான் கரிகாலன்.

"அது எப்படி முடியும்?" என்று கந்தமாறன் கேட்டான். "அபிமன்யுவையும், அரவானையும் கிழவர்கள் என்று நாம் எண்ணுவதுண்டா?" மற்ற இருவரும் ஒன்றும் கூறாமல் மௌனமாயிருந்தார்கள்.

"தஞ்சாவூர் அரண்மனைச் சித்திர மண்டபத்தில் என் மூதாதையர்களின் சித்திரங்கள் எல்லாம் எழுதியிருக்கின்றன.

விஜயாலயச் சோழர், ஆதித்த சோழர், பராந்தக சக்கரவர்த்தி எல்லோரும் முதிய பிராயத்தவராகக் காட்சி அளிக்கிறார்கள். ஆனால் என் பெரிய பாட்டனார் இராஜாதித்யர் எப்படி இருக்கிறார்? நவயௌவன வீர புருஷராக விளங்குகிறார்! இராஜாதித்தர் இளம் வயதில் இறந்து போனார். அதனால் என்றைக்கும் அவர் யௌவனம் நீங்காத பாக்கியசாலி ஆனார்! நம்மில் யாருக்கு அத்தகைய பாக்கியம் கிட்டுகிறதோ, தெரியவில்லை!"

மற்ற இருவருக்கும் இந்தப் பேச்சு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அவர்கள் மௌனமாகவே இருந்தார்கள்.

"ஏன் திடீரென்று மௌனமாகிவிட்டீர்கள்? சாவு என்றால் உங்களுக்கு ஏன் இவ்வளவு பயம்? இந்த உடம்பு போனால் இன்னொரு புத்தம் புதிய உடம்பு கிடைக்கிறது. எதற்காக மரணத்துக்கு அஞ்ச வேண்டும்? என்னுடைய நண்பன் வந்தியத்தேவன் இங்கே இருந்தால் என்னை ஆமோதிப்பான். அவனைப் போன்ற உற்சாக புருஷனைக் காண்பது அரிது. யமலோகத்தின் வாசலில் கொண்டு போய் விட்டாலும் அவன் குதூகலமாய்ச் சிரிப்பான்!" என்றான் இளவரசன் கரிகாலன்.

அச்சமயத்தில் அவர்களுக்கு எதிராக சாலையில் இரண்டு குதிரைகள் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வெகு வேகமாக வருவதை அவர்கள் பார்த்தார்கள். கண்மூடித் திறக்கும் நேரத்தில் அக்குதிரைகள் அவர்களை நெருங்கி வந்து விட்டன. அவை வந்த வேகத்தைப் பார்த்தால் இளவரசர் கோஷ்டி எதிரில் வருவதைக் கூடக் கவனியாமல் தாண்டிப் போய்விடும் எனத் தோன்றியது. அவ்வளவு அகம்பாவம் பிடித்தவர்கள் யார் என்று பார்ப்பதற்காகக் கந்தமாறனும், பார்த்திபேந்திரனும் வேல்களை நீட்டிச் சாலையின் குறுக்கே வழி மறிக்க ஆயத்தமானார்கள். ஆனால் வந்த குதிரைகள் அவர்களுக்குச் சிறிது தூரத்தில் தடால் என்று பிடித்து இழுத்து நிறுத்தப்பட்டன.

வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் குதிரைகள் மீதிருந்து கீழே குதித்தார்கள். வந்தியத்தேவனைக் கண்டதும் இளவரசன் ஆதித்த கரிகாலனுக்குக் குதூகலம் தாங்கவில்லை. அவனும் குதிரை மீதிருந்து கீழே குதித்து முன்னேறிச் சென்று வந்தியத்தேவனைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

"தம்பி! உனக்கு நூறு வயது. இப்போது தான் உன் பெயரைச் சொல்லி ஒரு கண நேரங்கூட ஆகவில்லை!" என்றான் கரிகாலன்.


கந்தமாறனும், பார்த்திபேந்திரனும் இந்தக் காட்சியைப் பார்த்து அடைந்த அசூயை அவர்கள் முகத்தில் தெரிந்தது. அவர்கள் சற்று முன்னால் குதிரையைச் செலுத்திக் கொண்டு போய் நின்றார்கள்.

சிறிது தூரத்தில் இன்னும் சில குதிரைகள் வருவதை அவர்கள் கண்டார்கள்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## பகைவர்கள் செய்த உதவி



(நேற்றைய தொடர்ச்சி)

அந்த இடத்தில் பெரிய ஹோட்டல் ஒன்று கட்டப்போவதாகவும், அதனால், அந்த இடத்தில் பிரமாண்டமாக ஒரு கட்டிடம் வரப்போவதாகவும், அதை கட்டுவதற்காக கட்டுமான பொருட்கள் அந்த இடத்தை சுற்றிலும் போடப்பட்டு காவலும் போடப்பட்டது. கட்டிட வேலை செய்ய ஆட்களும் அங்கு குடியமர்த்தப்படனர்.

இதனால் அந்த இடம் சந்தடியால் சூழப்பட்டு, அந்த குளத்தை சுற்றியுள்ள பறவைகளுக்கும். உயிரினங்களுக்கும், பெரும் துன்பமாகி விட்டது.

அது மட்டுமல்ல அங்கு குடியமர்த்தப்பட்டிருந்த பணியாட்கள், குளிப்பதற்கும், மற்றும் பலவித வேலைகளுக்கு குளங்களை உபயோகப்படுத்த ஆரம்பித்ததால், குளம் கொஞ்சம் கொஞ்சமாக மாசு சேர ஆரம்பித்து விட்டது.

மீன்களும் அந்த சோப்பு நுரையாலும், மற்றும் அழுக்குகளாலும், மூச்சு திணற ஆரம்பித்து விட்டது.

அவைகள் ஒன்று கூடி இந்த பிரச்சினையை பற்றி பேசின. இனி மேல் இந்த குளம் நமக்கு பாதுகாப்பானதல்ல. ஆகவே நாம் இங்கிருந்து வெளியேற முயற்சிக்க வேண்டும் என்று ஆலோசித்தன.

ஆனால் எப்படி இங்கிருந்து போவது, என்று புரியாமல் விழித்தன. திடீரென்று ஒரு மீன் யோசனை சொன்னது, நாம் ஏன் நாரை கொக்குகளிடம் உதவி கேட்க கூடாது?

அது எப்படி? அவைகள் நமது பகைவர்கள் அல்லவா? மற்றோர் மீன் சொன்னது.

பகைவர்கள்தான், மறுக்கவில்லை, ஆனால் இந்த ஆபத்தான தருணத்தில் நாம் அனைவரும் இன்னும் கொஞ்ச நாட்களில் மூச்சு திணறி இறக்க ஆரம்பித்தால், பாதிக்கப்போவது நாம் மட்டுமல்ல அவர்களும் தானே? நாம் உயிருடன் இருந்தால் தான் அவர்களுக்கு இங்கு வேலை? அதுவும் சரிதான், சரி யார் பேசுவது?

ஒரு மீன் அதற்கான பொறுப்பை எடுத்துக் கொண்டது. மறுநாள் அந்த மீன் ஒரு நாரையிடம் தங்களுடைய பிரச்சினையை பற்றி சொல்லி, அதனால் உங்களுக்கும் இனிமேல் உணவு பஞ்சம் வரும் என்று சூசகமாக உணர்த்தியது.

நாரை, நாளை மற்ற நாரைகளுடனும், கொக்குகளுடனும் பேசிவிட்டு சொல்வதாக கூறி சென்றது.

நாரைகளும், கொக்குகளும் கூடி பேசின. ஆம் உண்மைதான் இப்பொழுதே அந்த குளத்துக்கு செல்ல முடியவில்லை. எல்லா இடங்களிலும் மனிதர்கள் அசிங்கம் செய்து மாசுப்படுத்தி விட்டார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் கேட்க வேண்டும்; புத்திசாலித்தனமாகப் பதில் சொல்ல வேண்டும்; நிதானமாக யோசிக்க வேண்டும்; பாரபட்சமின்றி தீர்ப்பு வழங்க வேண்டும். – *சாக்ரட்டீஸ்*

வலம்புரி

TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெளியே வரவேண்டியவர் உள்ளே உள்ளே இருக்க வேண்டியவர் வெளியே

... கோன்முறை அரசு செய்க, குறைவிலாது உயிர்கள் வாழ்க... என்கிறது நம் தமிழ்.

அரசாட்சி என்பது நீதி தவறாது நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் உயிர்கள் குறைவிலாது வாழ முடியும்.

இங்கு அரசாட்சி என்பது மன்னன் முதற்கொண்டு மக்கள் வரையில் நீதி தவறாது வாழ்வதைக் குறிப்பதாகும்.

எனினும் நம் நாட்டில் கடந்த கால ஆட்சி எவ்வாறாக இருந்ததென்பதை நாம் அறிவோம்.

அந்தோ கொடுமை! நோயாளர்களுக்கு வழங்குகின்ற மருந்திலேயே மோசடி செய்கின்ற அளவில் பண ஆசை தலைக்கேறி விட்டது.

உண்மை. சுகாதார அமைச்சராக இருந்த கெஹெலிய ரம்புக்வெல தனது பதவிக் காலத்தில் கொள்வனவு செய்த மருந்தில் ஊழல் மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டு நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வருகிறது. இதற்காக அவர் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

உயிர் காக்கும் மருந்தில் நடந்த ஊழலை நினைக்கும்போது இதயம் பதறுகிறது.

கடவுளே! ஓர் இளம் தாய் புற்றுநோயால் அவஸ்தைப்படுகிறார். அந்த இளம் தாயை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். சிகிச்சை இடம்பெறுகிறது.

அவரின் குழந்தைகள் அழுகின்றனர். உறவுகள் ஊன் உறக்கமின்றி அந்த உயிர் பிழைத்து விட வேண்டும் என்பதற்காகப் பிரார்த்திக்கிறார்கள்.

இலட்சம் ரூபாய் பெறுமதியான உயிர்காக்கும் மருந்து இலவசமாக ஏற்றப்படுகிறது.

குறித்த மருந்து அந்தத் தாயின் உயிரைக் காப்பாற்றிவிடும் என்ற நம்பிக்கை ஒளிர்கிறது.

இருந்தும் யாருக்குமே தெரியாத ஒரு பெரும் கொடுமை நடந்தாகிறது.

ஆம், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அந்த இளம் தாய்க்கு ஏற்றப்பட்ட மருந்து மருந்தே அல்ல. அது வெறும் தண்ணீர் என்றால் நிலைமை எப்படி என்று பாருங்கள்.

அடப்பாவிகாள்! நோயாளர்களை இப்படிக் கொலை செய்து பணம் சம்பாதிக்க வேண்டுமா என்ன? சரி, அந்தப் பணத்தை உங்களால் அனுபவிக்க முடியுமா? நீங்கள் மட்டும் நிரந்தரமாக உயிர் வாழப் போகிறீர்களா? இப்பேற்பட்ட கொடுமை கூட்டாக நடந்தது என்ற அதிர்ச்சியிலும் வேதனையிலும் இருந்து மீள முடியவில்லை.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், சிறைக் கைதிகளுக்கு ஜனாதிபதி அநுர வழங்கிய பொதுமன்னிப்பில் கூட, சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மோசடி செய்துள்ளனராம்.

ஆம், மன்னிப்புக் கிடைத்தவரை உள்ளே வைத்துக் கொண்டு சிறைக்குள் இருக்க வேண்டியவரை வெளியே விடுவதென்பது எத்துணை பாவகாரியம்.

அந்தோ! உள்ளே இருக்க வேண்டியவர் வெளியே. வெளியே இருக்க வேண்டியவர் உள்ளே என்றால், இந்தப் பாவத்தை செய்தவர்கள் அதை அனுபவித்துத் தீர எத்தனை காலமாகுமோ யாமறியோம் பராபரமே.

### தையிட்டி விகாரை விவகாரத்தை வைத்து

# திசைகாட்டி அரசுக்கு எதிராக மக்களை திசை திருப்புகின்றனவாம் தமிழ்த்தலைமைகள்

## திசைகாட்டி எம்.பி பிரபு கண்டுபிடிப்பு

வடக்கு கிழக்கில் சில தமிழ் அரசியல்வாதிகள் தங்களது அரசியல் இருப்பைத் தக்க வைப்பதற்காகத் தையிட்டி விகாரை விவகாரத்தைக் கையிலெடுத்து அரசாங்கத்துக்கு எதிராக மக்களைத் திசைதிருப்பும் குழப்பகர செயற்பாட்டு அரசியல் நாடகங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றனர் எனத் தேசிய மக்கள் சக்தி மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

நேற்றுப் புதன்கிழமை (11) அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தலைமையில் இடம்பெற்ற மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டதின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துரைத்த அவர், தேசிய மக்கள் சக்தி இந்த அரசாங்கத்தைப் பொறுப்பேற்றதன் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வழிவகைகளையும் திட்டங்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் பொருளாதார ரீதியாக நலிவுற்ற மக்களுக்கான பல திட்டங்களை உருவாக்கி அவர்களது வாழ்வைப் பலப்படுத்துவதற்கான வேலையை செய்து வருகின்றோம்.

இவ்வாறு பல நல்ல விடயங்களை இன, மொழி வேறுபாடுகள் கடந்து இன ஐக்கியத்துடன் நாம் முன்னெடுத்து வருகின்றோம். ஆனாலும் சில அரசியல்வாதிகள் தங்களது அரசியல் இருப்புக்காக பல தரப்பட்ட குழப்பகர நிலைமைகளை வடக்குக் கிழக்கில் ஏற்படுத்தி வருகின்றனர்.

விசேடமாகத் தையிட்டி விகாரை தொடர்பான குழப்ப நிலையை அவதானித்து பார்த்தால் குறிப்பிட்ட தினமான போயா தினத்தில் மட்டும் அரசியல்வாதிகளுக்கு அந்த விகாரை தொடர்பான ஞாபகம் ஏற்படுகின்றது.

அவ் விவகாரத்தை வைத்து மக்களை அரசாங்கத்துக்கு எதிராக திசை திருப்புகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அரசாங்கத்தை குழப்புகின்ற செயற்பாட்டில் என்னதான் அவர்கள் ஈடுபட்டிருந்தாலும் நாங்கள் தொடர்ச்சியாக மக்களின் ஆதரவுடன் பயணிப்போம் என்றார். (ம-4,7)

## தென்னக்கோனைப் பதவி நீக்குவதற்கான பிரேரணை மீதான விசாரணை ஆரம்பம்

### நேற்று முக்கிய சாட்சியம் பதிவு

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் மூவரடங்கிய குழு நேற்று (11) சாட்சி விசாரணையை ஆரம்பித்துள்ளது.

அதன் பிரகாரம் நேற்று (11) சாட்சியமளித்த கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி அன்சலாம்டி சில்வா 2023ஆம் ஆண்டு வெலிகமவிலுள்ள ஹோட்டலொன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்ட சம்பவத்தின் போது உயரதிகாரிகள் தவறான பணிப்புரைகளை விடுத்ததாக மூவரடங்கிய குழு முன்னிலையில் தெரிவித்தார்.

மேலும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் அப்போதைய பணிப்பாளர் நெவில் டி சில்வாவின் உத்தரவிற்கமையவே ஹோட்டல் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டில் வெலிகம W-15 ஹோட்டல் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவமே தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து நீக்குவது தொடர்பில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய குற்றச்சாட்டாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

### கலட்டி வீரகத்தி பிள்ளையாராலய

## சங்கடஹர சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம் வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்திப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை 14 சங்கடஹர சதுர்த்தி உற்சவம் சிறப்புற இடம்பெறவுள்ளது.

மாலை 3.30 மணிக்கு மூலமூர்த்தி பூஜையை தொடர்ந்து விசேட வசந்த மண்டபப்பூஜை நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதிவலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார் என்பதனை பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறியத் தருகிறார். (ம-4,7)

## வடக்கின் அபிவிருத்திக்கு மும்மடங்கு நிதி ஒதுக்கீடு

### வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் வடக்கின் அபிவிருத்திக்குக் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 3 மடங்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று (11) நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலநிலை மாற்றம் காரணமாக மழை எப்போது கிடைக்கும் என்பதை எதிர்வுகூற முடியாத நிலைமை இருக்கின்றது. எனவே திட்டங்களை எவ்வளவு விரைவாகச் செய்து முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்து முடிக்க வேண்டும்.

அடையாளப்படுத்தப்பட்டுள்ள திட்டங்களை உரிய காலத்தில் செயற்படுத்தி முடிக்கவேண்டும். அடுத்த மாதத்திலிருந்து நிதி மற்றும் பௌதீக முன்னேற்றங்கள் அதிகளவாக இருக்க வேண்டும் என்றார். (ம-4,7)

## கெஹெலியவின் வீட்டில் பணிபுரிந்த பணிப்பெண் ஒருவரும் கைது

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் வீட்டில் பணிபுரிந்த பணிப்பெண் ஒருவரும் நேற்று (11) இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.


சுகாதார அமைச்சுக்குப் பெயரளவிலான நியமனங்களை வழங்கியதன் ஊடாக அரசாங்க சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளைத் தவறாகப் பயன்படுத்தியதாக முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நடத்தி வரும் விசாரணைகளுக்கு அமையவே குறித்த பெண் கைது செய்யப்பட்டதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எம்பிலிபிட்டியப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரி பயணம்

புருசோத்தமன் **04**



**மாண்புமிகு ந.ரங்ககசாமி**
**புதுவை மாநில முதல்வர்,**
**கம்பன் கழப் புரவலர்**

புதுச்சேரிக் கம்பன் விழாவில் முதன்மைக்குரியவராக கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்களே இருந்தார்.

கழகத்தின் பொதுச் செயலாளரும் புதுச்சேரி மாநிலத்தின் முன்னாள் சட்டசபை சபாநாயகருமான சிவகொழுந்து அவர்கள் கம்பவாரிதி தங்கிருந்த விடுதிக்கு வந்து சந்தித்தார்.



**முதல்வர் தலைமையில் கம்பன் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்தல்**

இதன்போது தான் கம்பன் விழா அழைப்பிதழை வழங்கச் சென்ற போது, அழைப்பிதழைப் பெற்றுக் கொண்ட அனைவரும் கேட்ட முதலாவது கேள்வி, கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்கள் விழாவுக்கு வருவாரா? என்பது தான் என்ற தகவலைத் தெரிவித்திருந்தார்.

அந்தளவுக்கு கம்பவாரிதி மீது புதுச்சேரி மக்களும் அங்குள்ள பிரமுகர்களும் மிகுந்த பற்றும் பக்தியும் கொண்டிருந்தனர்.

**முதல் நாள் நிகழ்வு**

2025 ஆம் ஆண்டிற்கான புதுச்சேரிக் கம்பன் கழகத்தின் 58 ஆவது விழா 2025 மே 09 ஆம் திகதி ஆரம்பமாகியது.

புதுவை நகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான மிகப் பிரமாண்டமான மண்டபத்தில் மூன்று நாள் விழா.

அந்த மண்டபத்திற்கு **கம்பன் கலையரங்கு** என்று பெயர் சூட்டப்பட்டுள்ளதெனில், புதுச்சேரிக் கம்பன் கழகத்தின் செல்வாக்கு எவ்வாறாகவுள்ளதென்பதை நாம் புரிந்து கொள்வதில் கடினமிருக்க முடியாது.

நகராட்சி மன்றத்தின் கலையரங்கு கம்பன் பெயரில் அமைந்ததால், விழா மண்டபத்தின் நுழைவாயிலுக்கு அருகில் கம்பனின் பிரமாண்டமான உருவச்சிலை நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

விழா மண்டபத்தின் நுழைவாயில் விசேடமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. கூடவே விழாவை தெளிவுபடுத்துகின்ற பிரமாண்டமான பதாகைகள் உட்பட விழா மண்டபம் அமைந்த வளாகம் எங்கும் விசேடமாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

கம்பனின் உருவச் சிலைக்கு மாலை அணிவிக்கின்ற நிகழ்வே விழாவின் தொடக்கம்.

கம்பனின் சிலைக்கு புதுச்சேரி மாநிலத்தின் முதலமைச்சர் ந.இரங்கசாமி அவர்கள் மாலை அணிவித்தார்.

ஏலவே குறிப்பிட்டது போல புதுச்சேரிக் கம்பன் கழகத்தின் புரவலராக மாநிலத்தின் முதலமைச்சரே இருப்பார்.

அந்தவகையில் புதுச்சேரி முதலமைச்சர் இரங்கசாமி



அவர்கள் நேர காலத்தோடு அங்கு வந்திருந்தார்.

உயர்ந்த தோற்றம், சிரித்த முகம், நெற்றியில் திருநீறு சர்வ சாதாரணமாக எல்லோருடனும் பழகிக் கொண்டார். அவரை எல்லோரும் உயர்வாக மதித்தனர்.

விருந்தினர்களை வரவேற்று அழைத்துச் செல்லுகின்ற நிகழ்வு மிக அற்புதமாக அமைந்திருந்தது.


ஒரு நிகழ்வின் நல்ல ஆரம்பம் அந்த நிகழ்வின் அரைவாசி வெற்றி என்கிறது ஓர் ஆங்கிலப் பழமொழி.

அந்தப்பழமொழியின் நிதர்சனத்தை புதுச்சேரிக் கம்பன் கழகத்தின் 58 ஆவது விழாவில் தரிசித்தேன்.

கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்கென தனியான வாகனம் ஒதுக்கப்பட்டிருந்தது. அவர் தங்கியிருந்த விடுதியில் இருந்து அவர் அந்த விசேட வாகனத்தில் விழா மண்டபத்திற்கு வந்து இறங்கிய போது, அங்கு நின்றவர்கள் எல்லோரும் கம்பவாரிதியை நோக்கி இருகரம் கூப்பி வணங்கினர்.

இன்னும் பலர் வயது வேறுபாடின்றி அவரின் காலைத் தொட்டு ஆசி பெற்றனர். வாகனத்தால் இறங்கும் போதே இவை நடந்தன.

இதில் மிகப் பெரும் மகிமை புதுச்சேரி மாநிலத்தின் மந்திரி பிரதானிகள், வர்த்தகப் பிரமுகர்கள் அனைவரும் கம்பவாரிதி மீது கொண்டிருந்த மதிப்பு மரியாதையும் எனலாம். இவை யாவற்றையும் கண்ட எம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை.



எங்கள் ஈழத்தமிழ்ப் பேராளுமைக்கு இந்திய தேசத்தில் இருக்கக்கூடிய மதிப்பையும் மரியாதையையும் நேரில் கண்ணுற்ற போது, உண்மையிலேயே என் தோள் புயங்கள் உயர்ந்து கொண்டன. இத்துணை பெருமை எங்கள் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களால் எங்கள் ஈழ மண்ணுக்குக் கிடைத்ததேயென்ற புளகாங்கிதம்.

இவை காரணமாகவே இந்தப் பயணக் கட்டுரையை எழுத வேண்டும் என்ற எண்ணம் என்னுள் எழுந்தது.

ஆம், கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்களை தமிழகமும் புதுச்சேரியும் தங்கள் கேசத்தில் தூக்கி வைத்துக் கொண்டாடுகின்றன.

அவரின் உரையைக் கேட்டால் அதுவே தங்களுக்குக் கிடைத்த பெரும்பேறு என்று அவர்கள் கருதுகின்றனர்.

இந்த உண்மையை எங்கள் ஈழத்தமிழ் மக்கள் அறிய வேண்டும் என்ற ஒரே நோக்கிலேயே புதுச்சேரிப் பயணத்தை எழுத முனைந்தோம்.

விழா மண்டபத்திற்கு வருகை தந்த கம்பவாரிதியை கழகப் பிரமுகர்கள் சூழ்ந்து கொண்டனர். அவரின் வருகையால் அவர்களின் மனம் பூரித்திருந்ததை அவர்களின் முகபாவனையில் இருந்து உணர்ந்து கொண்டேன்.

விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். உரிய நேரத்தில் விழா ஆரம்பமாகியது. தமிழ்த் தாய் வாழ்த்தே அரங்க நிகழ்வில் இறை வணக்கமாகியது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரக்...

ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் கே.பி.எல்.சந்திரலால் இதனைத் தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டின் இரண்டாம் பாதிக்கான மின்சாரக் கட்டணத் திருத்தம் இந்த வார இறுதிக்கு முன்னர் அறிவிக்கப்படும் என இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஏற்கெனவே தெரிவித்திருந்தார்.

அந்தவகையில் இலங்கை மின்சார சபை 2025ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான மின்சாரக் கட்டணங்களை 18.3 வீதத்தால் அதிகரிக்குமாறு முன்மொழியப்பட்டிருந்தது.

எனினும், தற்போது 15 வீதத்தால் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,4)

## வடக்கில்...

மாகாணத்தின் சில பகுதிகளுக்குப் பிற்பகலில் அல்லது இரவு வேளைகளில் அவ்வப்போது மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் தலைவரும் வானிலை ஆய்வாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

நண்பகல் வரை மிகவும் வெப்பமான வானிலை நிலவும் எனினும், பிற்பகலுக்குப் பின்னர் இடியுடன் கூடிய மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7,4)

## தண்டனைச்...

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

உடலியல்தண்டனை மூலம்பிள்ளைகளுக்கு ஏற்படும் உடல் மற்றும் உள துன்புறுத்தல் அதிகரித்திருப்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே எந்தவொரு துறையிலும் உடல் தண்டனை மூலம் துன்புறுத்தலுக்கு உள்ளாவதனைத் தடை செய்தல் மற்றும் உடல் துன்புறுத்தலுக்காகத் தண்டனை விதிப்பதற்கான ஏற்பாடுகளை விதிப்பதற்காக (19 ஆவது அதிகாரம்) தண்டனைச் சட்டக் கோவையை திருத்தம் செய்வதற்காக 2024-04-29ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஏற்புடைய பணிகளுக்கு சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்ட தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிட்டு, பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள போதிலும், அதற்கமைய செயற்பட முடியவில்லை.

குறித்த சட்டமூலத்தை துரிதமாக அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது என்றார். (ம-7,4)

## பூநகரி...

சபையின் முதலாவது கன்னியமர்வானது சபையின் தவிசாளர் சிவகுமாரன் சிறீரஞ்சன் தலைமையில் நேற்று ஆரம்பமானது.

இருபது உறுப்பினர்களைக் கொண்ட பூநகரி பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக பத்து உறுப்பினர்களும் தேசிய மக்கள் சக்தி சார்பாக மூன்று உறுப்பினர்களும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பாக மூன்று உறுப்பினர்களும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி சார்பாக ஒரு உறுப்பினரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக ஒரு உறுப்பினரும் சுயேட்சைக் குழு 01-ஒரு உறுப்பினரும், சுயேட்சைக் குழு 02- ஒரு உறுப்பினரும் என இருபது உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## வடக்கு மனித...

யாழ்.செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மனிதப் புதைகுழி அகழ்வுக்கு நிதி வழங்குவோம், விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்று வெறும் வார்த்தைகளைக் கூறிவிட்டு இந்த அரசு இருக்கக்கூடாது.

வடக்கில் செம்மணி உள்ளிட்ட பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்படும் எலும்புக் கூடுகளைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி உண்மைகளைக் கண்டறிய அரசு முழு வீச்சுடன் செயற்பட வேண்டும்.

குற்றங்கள் நடந்திருப்பின் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் நீதிமன்றமும் நடுநிலையுடன் முழுக்கரிசனை செலுத்தும் என்று நம்புகின்றோம்" என்றார். (ம-7,4)

## முன்னாள்...

முறைப்பாடு தொடர்பாக வாக்கு மூலம் அளிப்பதற்காக அவர் நேற்றுப் புதன்கிழமை (11) குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையானார்.

நாட்டிற்குள் மருந்துகளை இறக்குமதி செய்வது தொடர்பாக கெஹலிய ரம்புக்வெல அளித்திருந்த முறைப்பாட்டுக்கமைய, முந்தைய அரசாங்கத்தின் பல அமைச்சர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இது தொடர்பாக வாக்கு மூலம் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## ஜனா...

வரவேற்பளிக்கப்பட்டது.

பேர்லினின் பெல்வீவ் மாளிகைக்கு வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, ஜேர்மன் முப்படை மரியாதையுடன் வரவேற்கப்பட்டதுடன் முப்படைகளின் அணிவகுப்பையும் பார்வையிட்டார்.

உத்தியோகபூர்வ வரவேற்பு நிகழ்வின் பின்னர், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கும் ஜேர்மனி ஜனாதிபதி பிராங்க் வோல்டர் ஸ்டெய்ன் மையருக்கும் இடையில் இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் சர்வதேச உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், தொழில் பயிற்சி மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது. (ம-7,4)

## விக்னேஸ்வரன்...

பில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை தொடர்பில் சமூகவலைத்தளங்களில் பலர் தமது விமர்சனங்களையும் தமது கருத்துக்களையும் முன்வைத்து வருகின்றனர்.

"விக்னேஸ்வரனை அரசியலுக்கு அழைத்து வந்தது மாபெரும் தவறு" என எம்.ஏ.சுமந்திரன் தமது சமூக வலைத்தளத்தில் முன்பு போட்ட பதிவுகளைச் சுட்டிக்காட்டி விமர்சனம் செய்து வருகின்றனர். (ம-7,4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.06.11
சீட்டிழுப்பு இலக்கம் 5857
E 3 7 1 7 9 9
அத சம்பத E 1 7 9 9
சீட்டிழுப்பு இலக்கம் 0432
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.06.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1887
E 39 55 59 73 E
Double Chance 34070

மெகா பவர்
திகதி 11/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2205
F 19 10 45 50 80

ஜய
திகதி 2025.06.11
சீட்டிழுப்பு இலக்கம் 0125
V 1 8 8 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4099
சீட்டிழுப்பு திகதி 11.06.2025
K 37 58 59 73
K
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.11
சீட்டிழுப்பு இலக்கம் 1166
கன்னி 05 06 28 42 கன்னி
07075 13

உத்தியோகபூர்வ முடிவுகள்
11.06.2025 வெற்றி வாரம் 565
ஆங்கில எழுத்து G
மற்றும் வெற்றி இலக்கம் 9 6 3 1 2 3
87386
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20.971.142.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2831
சீட்டிழுப்பு திகதி 2025.06.11 தினம் புதன்கிழமை
02 17 38 58 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,588,782.40
DLB

சனிதா
திகதி 11.06.2025 வெற்றி வாரம் 4992
14 28 51 61 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,913,079.20
ரூ. 50,000/- 61901
DLB

ஜயோதா Jayoda
திகதி 2025.06.11 வெற்றி வாரம் 2134
12 37 54 55 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,825,638.80
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4543
சீட்டிழுப்பு திகதி 11.06.2025 தினம் புதன்கிழமை
11 13 20 61 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,818,566.00
231162
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 39 29 38 60 62
சுப்பர் இலக்கம்
2007
11.06.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.577,775,279.00
DLB

புதன்கிழமை
வெற்றி வாரம்: 2657
சீட்டிழுப்பு திகதி: 2025.06.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61.913.152.00
அட கோடிபதி ADA KOTIPATHI
09 31 43 56 R
787577
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டணம் அதிகரிப்பு மக்கள் ஆணையை மீறும் செயல்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

மின்சாரக் கட்டண அதிகரிப்பு மக்கள் ஆணையை மீறும் செயல் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டண அதிகரிப்புத் தொடர்பாக நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நள்ளிரவு முதல் மின்சாரக் கட்டணத்தை 15% ஆல் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இலங்கை மின்சார சபையும், அரசாங்கமும் முன்வைத்த முன்மொழிவின் அடிப்படையில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு இந்த முடிவை எடுத்துள்ளது. இந்த மின்சாரக் கட்டண அதிகரிப்பு மக்கள் ஆணையை மீறும் செயலாகும். மக்களின் குரலுக்கு செவி சாய்க்காத போக்காகும். இது இந்நாட்டு மக்களை ஏமாற்றும் நடவடிக்கையாகும்.

ஜனாதிபதித் தேர்தலின் போது, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மின்சாரக் கட்டணத்தை ரூ.9000 இல் இருந்து ரூ.6000 ஆகவும், ரூ.3000 கட்டணத்தை ரூ.2000 ஆகவும் குறைப்போம் என்றார். மின்சாரக் கட்டணத்தை 33% ஆல் குறைப்போம் என்றும் மேடைக்கு மேடை பிரஸ்தாபித்தார். பின்னர், பொதுத் தேர்தலில் அக்கட்சி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை ஈட்டி 159 ஆசனங்களை தனதாக்கிய சந்தர்ப்பத்திலும் கூட மின்சாரக் கட்டணத்தை 33% ஆல் குறைத்திருக்க வேண்டும்.

ஆனால் அது நடக்கவில்லை. நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அப்பட்டமாக மீறி, ஜனாதிபதியே தான் வெளியிட்ட அறிக்கைகளை பொய்களாக மாற்றும் வகையில், மின்சாரக் கட்டணத்தை 15% ஆல் அதிகரிக்க தற்போது இந்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கை இந்த நாட்டின் மின்சார நுகர்வோரின் உரிமைகளை அப்பட்டமாக மீறும் செயலாக அமைந்து காணப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) அடுத்த கட்ட தவணையைப் பெறுவதற்காக மின்சாரக் கட்டணங்கள் இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ளன.

நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற வேண்டுமானால் மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்க வேண்டும் என்ற நிபந்தனையை சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ளது.

திசைகாட்டி தலைமையிலான ஜே.வி.பி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தமொன்றையும் இணக்கப்பாடொன்றையும் எட்டுவோம் என வாக்குறுதியளித்திருந்தது.

என்றாலும் ஆட்சிக்கு வந்தவுடன் தனது ஆணையை மீறியுள்ளதுடன், முந்தைய அரசாங்கத்தின் சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாட்டை அவ்வாறே முன்கொண்டு செல்கிறது. இந்த அரசாங்கம் மக்கள் ஆணையை மீறி செயற்பட்டு வருகிறது. மக்கள் ஆணையை காட்டிக் கொடுத்து பொதுமக்களின் கருத்தை கிடப்பில் போட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் இணக்கப்பாட்டை இவர்கள் அதேமுறையில் செயற்படுத்தியதன் விளைவாக, நாடும் மக்களும் இன்று இவ்வாறான நிலைமைகளுக்கு ஆளாகியுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். (ம-4,7)

# ஆஸ்திரியாவில் பாடசாலை ஒன்றில் துப்பாக்கிச்சூடு

## மாணவர்கள் உட்பட 8 பேர் பலி

ஆஸ்திரியா நாட்டின் கிராஸ் நகரில் ஒரு பள்ளிக்கூடத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் மாணவர்கள் உட்பட 8 பேர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது. துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக சந்தேகிக்கப்படும் மர்ம நபரும் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு உயிரிழந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

கிராஸ் நகரில் ஒரு பள்ளியில் உள்ளூர் நேரப்படி காலை 10 மணியளவில் துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது.

மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 8 பேர் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்துள்ளனர்.

பள்ளியில் உள்ள கழிவறைகளில் ஒன்றில் மாணவர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டு உயிரிழந்த நிலையில் கிடந்தார்.

அவர்தான் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியிருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது. (ம-4,7)

# கொழும்பில் கைக்குண்டுடன் இராணுவச் சிப்பாய் கைது

கொழும்புக்கு அருகே நடைபெற்ற பொலிஸ் சோதனை நடவடிக்கையொன்றின் போது கைக்குண்டு ஒன்றுடன் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்புக்கு அருகே கடவத்தைப் பிரதேசத்தில் மஹகடே சந்தியில் நேற்று(11) காலை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

முச்சக்கரவண்டியொன்றை நிறுத்தி பொலிஸார் சோதனையிட்ட போது அதற்குள் இருந்தவர்களிடம் இருந்து கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து முச்சக்கர வண்டியில் பயணித்த மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் உள்ளடங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,7)

# குரங்குகளை தடுத்து வைக்க பாதுகாப்பு சரணாலயம்

குரங்குகளால் ஏற்படும் சேதங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அவற்றை தடுத்து வைக்கும் இடங்களை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்படி முன்னோடித் திட்டம் மாத்தளை மாவட்டத்தில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்பு சங்கம் தெரிவிக்கிறது. நாட்டின் முதலாவது குரங்கு பாதுகாப்பு சரணாலயம் மாத்தளை மாவட்டத்தில் களுகங்கை நீர்த்தேக்கத்திற்கு அருகில் அமைப்பதற்கு இனங்காணப்பட்டுள்ளது. நீர், உணவு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்கு 150 ஹெக்டயர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு 283.87 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-4,7)


JK IT CENTER
உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!
கணனி கற்கை நெறி
MICROSOFT OFFICE
MS WORD, MS EXCEL,
POWERPOINT, MS ACCESS
HTML, CSS, JAVASCRIPT,
PHOTOSHOP, CORELDRAW,
INDESIGN
கணனி கற்கை நெறியுடன் தொழில் பயிற்சியும் வழங்கப்பட்டு அதற்கான சான்றிதழ்களும் வழங்கப்படும். (4522)
✧ முதல் பதிவு செய்யும் 20 மாணவர்களிற்கு எந்த வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
✧ 100 மாணவர்களிற்கு 50% கட்டணக் கழிவு வழங்கப்படும்.
பதிவு திகதி: 13.06.2025 – 25.06.2025
கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
074 181 8412, 076 180 3590

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-
குறைந்த விலை - நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-
எமது நேரடி கிளைகள்
V2 TRAVELS 076 822 6241 076 822 6237

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3182)
076 825 7716 (ஆகாஸ்)

பாதுகாப்பு ஊழியர் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு பெண் பாதுகாப்பு ஊழியர் தேவை.
(பகல் கடமை)
தொடர்பு: 076 097 3121

வைத்தியம்
கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போதாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD) (1220)
தொடர்புகளுக்கு: 0777 301 669

உடனடி விற்பனைக்கு
புத்தம் புதிய பலட் றக்
( Hand pallet truck - 2.5 தொன் )
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
076 097 3121





வெளிநாட்டில் வசிக்கும் மணமகளிற்கு மணமகள் தேவை
1990 இல் பிறந்த கனடாவில் வசிக்கும் மணமகனுக்கு உள்நாட்டில்/ வெளிநாட்டில் வசிக்கும் மணமகள் தேவை. (1219)
077 335 3461

வெளிநாட்டில் வசிக்கும் மணமகளிற்கு மணமகன் தேவை
1993 இல் பிறந்த கனடாவில் வசிக்கும் மணமகளுக்கு உள்நாட்டில்/ வெளிநாட்டில் வசிக்கும் மணமகன் தேவை. (1219)
077 335 3461


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org